


MAGAZINE

# GOVERNMENT COLLEGE OF EDUCATION

Komarapalayam - 638 183.

1985

For Private Circulation Only.

With the best compliments from:

# S. S. M. Brothers,

(Prop: S. S. M. Brothers Trust)

Post Box No. 134, 11-D Gandhipuram Main Road,

**KOMARAPALAYAM - 638 183.**

Tel: "VEENA" Telex: 0856-242-SSM-IN

Phones: Bhavani 511, 522, 593, 752, 753 & Ed. 75543

**VEENA EMBROIDERIES:**

Embroidered Fabrics, available in American Georgette, Full Voiles, Voiles and Zigling, Polyester, Georgette and Shiffon Sarees, Punjabi Suits, Petticoat, Blouses, Laces, Thupattahs, Bed Spread and furnishing Fabrics.

Manufactured with imported machines with highly skilled workmen. Our Embroidered dress materials are exported to various countries.

**BRANCHES :-**

1. No. 54, Godown Street,
   MADRAS - 600 001. Phone: 28196

2. No. 40, Thiruvenkatasamy Chetty Street.
   ERODE - 638 001. Phone: 78501 & 72645

3. No. 12. Marvari Temple Lane,
   Chickpet, BANGALORE - 560 053.
   Phone: 77170

# ஆண்டு மலர்

இதழ் 30

ஏப்ரல் 1985

**அரசு கல்வியியல் கல்லூரி,**

**கொமாரபாளையம் - 638 183.**

# மலர்க் குழு

*தலைவர் :*

முதல்வர் திரு. டி. கே இராஜகோபாலன்
பி. ஏ. (ஆனர்ஸ்), எம். எட்.,

*ஆசிரியர் :*

திருமதி. பி. ஜெயலட்சுமி, எம் ஏ.. (வரலாறு), எம். எட்.,

*உறுப்பினர்கள் :*

திரு. என். கோவிந்தராஜுலு, எம். ஏ., பி. லிப்., எஸ்ஸி.,
திரு. ஜி. வரதமூர்த்தி, எம். ஏ., (ஆங்கிலம் & வரலாறு) எம். எட்.,
திரு. என். எஸ். சிலம்பண்ணன், எம். ஏ., பி. எட்.,

*மாணவ உறுப்பினர்கள் :*

திரு. சி. முருகேசன், எம். ஏ.,
திரு. என். ராஜேந்திரன், பி. எஸ்சி.,
திரு. டி. தர்மலிங்கம், எம். எஸ்சி.,



# மலர் அறிமுகம்

அன்புடையீர்,

எங்கள் கல்லூரி ஆண்டு மலரின் 30-வது இதழை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்

மாணவர்களின் சீரிய சிந்தனைகளும் உயர்ந்த கற்பனை உணர்வு-களும் அழகிய கவிதைகளாக கட்டுரைகளாக இம்மலரில் இடம் பெற்றுள்ளன. இவர்களின் தளர் நடையில் தடுமாற்றம் இருக்கலாம். தவறி விழுதல் இருக்கலாம். ஆனால் அந்த மழலை நடையைக் காண்பதில் தானே இன்பம்! மாணவர்கள் நடைமுறை உலகைக் கூர்ந்து நோக்கி இலக்கிய உணர்வோடு சமூகப் பார்வையைப் பதித்து படைத்து அளித்த ஒரு சிலவற்றை உங்கள் முன் வைத்துள்ளேன். இம் மலரின் செம்மையும் சிறப்பும் எங்கள் முதல்வர் அவர்களைச் சாரும் இப்பணியில் பங்கேற்று உழைத்து இம் மலருக்கு மணம் சேர்த்த எல்லோரும் பாராட்டுக்குரியவர்கள்.

விளம்பரங்களை தந்துதவிய வணிகப்பெருமக்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி. விரைவில் மலரை நல்ல முறையில் உருவாக்கித் தந்த பவானி ராஜா அச்சகத்தார் அவர்களுக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி.

சிறந்த முறையில் மலரை வெளியிட உதவிய அனைவருக்கும் நன்றி கூறி மலரின் மணத்தை நுகர உங்களை மலர்க் குழுவின் சார்பில் அன்புடன் வரவேற்கிறேன்.

பேரா. **பி. ஜெயலட்சுமி,**
ஆசிரியர்.

# மலரின் உள்ளே...


1 கல்லூரி ஆண்டறிக்கை
2 சமுக நலப்பணிபாடி வாழ்க்கை
3 இருவரை பயந்த நங்கை
4 அண்ணாவின் அருந்தமிழ்
5 சிந்தனைக்குச் சில
6 பெண்ணே உன்னைப்பற்றி
7 மண்ணுக்கே சுமையானேன்
8 பட்டங்களை சுமக்கும் பாமரர்கள்
9 வேலை நிறுத்தம்
10 குமாரகம்பணன்-ஆய்வு
11 உங்களுக்குத் தெரியுமா?
12 ஒரு எண்ணம் அரங்கேறுகிறது
13 பனித்துளிகள்
14 OUR TRAINEES
15 Men Are four
16 Academic Prizes
17 The Sweety Night
18 Life
19 Proverbs
20 பரிசு பெற்றவர்கள்
21 Athletic winners
22 Science And children
23 Our Exchange List



கல்லூரி முதல்வர்
பேராசிரியர்
**டி. கே. இராஜகோபாலன்** பி.ஏ., (ஆனர்சு) எம்.எட்.,

# அரசு கல்வியியல் கல்லூரி, குமாரபாளையம்.

## கல்லூரி ஆண்டறிக்கை 1984 — 85.

கல்லூரி ஆண்டு விழா சிறப்பு விருந்தினர் ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரி முதல்வர் உயர்திரு. எம். கே. சுப்பிரமணியம் அவர்களே! பேராசிரியப் பெருமக்களே!! அலுவலக அன்பர்களே!!! மாணவர்களே!!!! விருந்தினர்களே!!!!!

இக் கல்லூரியில் 30ம் ஆண்டு விழாவும் விளையாட்டுப் போட்டி விழாவும் அனைத்து மன்றங்களின் நிறைவு விழாவும் ஒருங்கே நிகழும் இந்நன்னாளில் உங்கள் அனைவரையும் வரவேற்று இவ்வாண்டு அறிக்கையை உங்கள் முன் வைக்கிறேன்.

### கல்லூரியின் வரலாறு :-

இக் கல்லூரி 1955ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் திரு. வி.டி. டைட்டஸ் அவர்களை முதல்வராகக் கொண்டு தொடங்கப் பெற்றது. கல்லூரிக்கென்று தனிக்கட்டிடம் இல்லாத நிலையில் தற்பொழுதுள்ள அரசு மேல் நிலைப்பள்ளியின் ஒரு பகுதியில் இயங்கி வந்தது. 1972ம் ஆண்டில் புதியதாகக் கட்டிடம் கட்டப்பெற்ற பின் இப் பகுதிக்கு மாற்றப்பட்டது. 1959ம் ஆண்டில் புலவர் பயிற்சி வகுப்பும் 1974ம் ஆண்டில் எம். எட். பகுதி நேர வகுப்பும் தொடங்கப் பெற்றன. 1977ம் ஆண்டில் புலவர் பயிற்சி வகுப்பு நிறுத்தபட்டது. 1982ம் ஆண்டு முதல் பகுதி நேர வகுப்பாக இருந்த எம். எட் பட்டப்படிப்பு முழுநேர வகுப்பாக மாற்றப்பட்டுள்ளது. இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி சிறந்த பாரம்பரியத்தை உருவாக்கிய முன்னாள் முதல்வர்களுக்கும் பெரியோர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆசிரியர் மன்றங்கள் :-

இக் கல்லூரி உடற்கல்வி இயக்குநர் திரு. அப்துல் கபார் அவர்கள் அரசு கலைக் கல்லூரி திருவெரம்பூர்-திருச்சி மாவட்டம் மாற்றலாகிச் சென்று விட்டார். புதுக்கோட்டை அரசு கல்வியியல் கல்லூரியில் உடற்கல்வி இயக்குநராக இருந்த திரு. கே. ரங்கசாமி அவர்கள் மாறுதல் பெற்று இங்கு பணியேற்றார்.

12—2—85 அன்று கல்வியியல் பேராசிரியர் திரு ஆர். பாலசுப்பிரமணியம், எம்.ஏ. எம்.எட், அவர்கள் இணைப்பாளராக மாறுதல் பெற்று அரசு கல்வியில் கல்லூரி சைதாப்பேட்டை சென்னை சென்று விட்டார். இக் கல்லூரி ஆங்கில துணைப் பேராசிரியர் திரு. ஜி. வரதமூர்த்தி எம். ஏ., (ஆங்கிலம்), எம். ஏ. (வரலாறு). எம். எட்., அவர்கள் கல்வியியல் துணைப் பேராசிரியராக பணியேற்றார், கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரி ஆங்கிலத் துணைப் பேராசிரியராகப் பணியாற்றிய திரு, ஆர். தங்கவேலு எம் ஏ, பி. எட்., அவர்கள் இக் கல்லூரியில் ஆங்கில துணைப் பேராசிரியராகப் பணியேற்றார். இக் கல்லூரி அலுவலகக் கண்காணிப்பாளர் திரு எம், லோகநாதன் அவர்கள் அரசு கலைக் கல்லூரி செய்யாறு மாற்றம் பெற்று சென்று விட்டார்,

### மாணவர் சேர்க்கை :-

பி எட் வகுப்பிற்கு விண்ணப்பித்தோர் எண்ணிக்கை ...324. விண்ணப்பித்தவர்களில் 100 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர், இதில் 7 மாணவர்கள் வேறு பணி கிடைத்துவிட்ட காரணத்-தால் கல்லூரியை விட்டு நீங்கியதால் தற்போது பயிலும் மாணவர்கள் 93 பேர்களே உள்ளனர், மாணவர்கள் தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்

| | | | |
|---|---|---|---|
| சேலம் ... 27 | | நீலகிரி ... 4 | |
| கோவை ... 7 | | மதுரை ... 2 | |
| திருச்சி ... 12 | | தென் ஆற்காடு ... 6 | |
| வட ஆற்காடு ... 7 | | கன்னியாகுமரி ... 1 | |
| பெரியார் மாவட்டம் ... 20 | | தருமபுரி ... 14 | |

மேலும் பாண்டிச்சேரி மாநிலத்தினின்றும் ஒரு மாணவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

## அரசு உதவித் தொகையும், பயனடைந்த மாணவர்களும்.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 16 பேர்களுக்கு அரசு உதவித் தொகையாக ரூ. 31265/-ம் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் 41 பேர்களுக்கு அரசு உதவித் தொகையாக ரூபாய் 24267—50-ம் இவ்வாண்டில் பெற்றனர்.

கல்லூரி முதல்வர் அவர்களே அனுமதி வழங்கி உதவித் தொகைகள் கிடைக்க ஏற்பாடு செய்தார். இவ்வுதவித் தொகையைக் குறிந்த காலத்தில் மாணவர்களுக்கு கிடைக்க உதவிய மாவட்ட ஆட்சியாளர், பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அலுவலர்கள் அனைவருக்கும் அனைவரின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

## தேர்வுகள் :-

கடந்த ஆண்டில் பல்கலைக் கழகத் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம்;-

| தேர்வின் பெயர் | தேர்வு எழுதியோர் எண்ணிக்கை | வெற்றி பெற்றோர் | வெற்றி விகிதம் |
|---|---|---|---|
| 1 பி எட் ஏப்ரல் 1984 செய்முறை ... | 83 | 83 | 100% |
| 2 பி எட் ஏப்ரல் 1984 எழுத்துத் தேர்வு ... | 83 | 76 | 92% |
| 3 பி எட் நவம்பர் 1984 முதல் பருவ எழுத்துத் தேர்வு ... | 85 | 72 | 85% |
| 4 எம் எட் 1984 2ம் பருவ எழுத்து தேர்வு ... | 4 | 3 | 75% |
| 5 எம் எட் நவம்பர் 1984 முதல் பருவ எழுத்துத் தேர்வு | 4 | 2 | 50% |
| 6 எம் எட் ஏப்ரல் 1984 ஆராய்ச்சிக் கட்டுரை ... | 4 | 3 | 75% |

## பாடி வாழ்க்கையும், சமூக சேவையும் :-

பி எட் மாணவர்களுக்குச் சமூக சேவை, பாடி வாழ்க்கை கல்லூரி வளாகத்திலேயே 9—1—85 முதல் 11—1—85 முடிய இனிதே நடைபெற்றது. இவ்வாண்டு பாடி வாழ்க்கையை தொழிலதிபர் திரு. எஸ். எஸ் எம். பி இளங்கோ அவர்கள் தலைமையில் கல்லூரி முதல்வர் பேராசிரியர் திரு. தி இராசகோபாலன் அவர்கள் சிறப்புரையாடலுடன் துவங்கப் பெற்றது. குமாரபாளையம் மேல்நிலைப் பள்ளி சாரண ஆசிரியர்கள் திரு சந்தோஷம், திரு. கே கணேசன், திரு. ராஜன் ஆகியோரால் விளக்கம், பாட்டு, சாரணப் பயிற்சி ஆகியவை படைக்கப்பட்டன. 9—1—85 அன்று பிற்பகல் பெரியார் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. பாரதியம்மா அவர்கள் நல்லாசிரியர் என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். 11—1—85 அன்று பிற்பகல் நிறைவு விழாவிற்கு தொழிலதிபர் திருமிகு. ஜே. கே. கே. முனிராஜா எம். டெக், (போல்டன்) எச் டி., தலைமை ஏற்று இக் கல்லூரியில் முன்னாள் முதல்வர் பேராசிரியர், தா. இரா. இலக்குமி நாராயணன், பி. எஸ். ஸி., (ஆனர்ஸ்) பி டி, அவர்கள் சிறப்புச் சொற்பொழிவுடன் பாடி வாழ்க்கை நிறைவுற்றது

## கற்பித்தல் பயிற்சி :-

முதல் நிலையாக சிறுகக் கற்பித்தல் 6—8—84 முதல் 10—8—84 முடிய ஐந்து நாட்கள் மாணவர்களால் சீரிய முறையில் நடைபெற்றது. இரண்டாம் நிலையாக 16—8—84 முதல் 14—9—84 முடிய கீழ்க்கண்ட பள்ளிகளில் விரிநிலை கற்பித்தல் பயிற்சி நடைபெற்றது. குமாரபாளையம், எடப்பாடி, சங்ககிரி திருச்செங்கோடு, ஈரோடு, பெருந்துறை, கவுந்தப்பாடி, அந்தியூர், பவானி அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் பள்ளி கல்வி அதிகாரிகளுக்கும் உளமார எங்கள் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். செய்முறைத் தேர்வுக்குழு வந்தபோது மாணவர்கள் கற்பித்தல் தேர்விற்கு பள்ளி மாணவிகளை அனுப்பி வைத்து உற்றுழி உதவிய ஜே. கே. கே. ரங்கம்மாள் உயர்நிலை பள்ளி நிர்வாகத்தினருக்கும் தலைமையாசிரியர் அவர்களுக்கும் உளமார நன்றிதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலகமும் படிப்பகமும், புத்தக வங்கியும் இக் கல்லூரி நூலகத்தில் ஆண்டு தொடக்கத்தில் இருந்த நூல்கள் 10144. இவ்வாண்டு சேர்க்கப் பெற்ற நூல்கள் 163. தற்போது நூலகத்திலுள்ள மொத்த நூல்கள் 10307. இவ்வாண்டு நூலகத்திற்கு புத்தகங்கள் ரூபாய் 5270/-க்கு வாங்கப்பட்டது. நூலக வங்கியிலுள்ள நூல்களை மாணவர்கள் நன்கு பயன்படுத்துகிறார்கள் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலகத்தில் பேராசிரியர்களும் மாணவர்களும் படிக்கும் வண்ணம் ஆங்கிலம், தமிழ் நாளிதழ்களும் கல்வித் தொடர்புடைய இதழ்களும் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன.

## ஆய்வகங்கள் :-

இவ்வாண்டு ஆய்வகங்க்கங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 6000/-

## ஆசிரியர் கழகங்களும் துணைக் கழகங்களும் :-

அனைத்துக் கழகங்களுக்கும் தலைவர் முதல்வர் ஆவார்.

| கழகத்தின் பெயர் | துணைத் தலைவர் | செயலர் |
|---|---|---|
| ஆசிரியர் மன்றம் | திரு. ஜி. வரதமூர்த்தி<br>கல்வியியல் துணை பேராசிரியர் | பி. ராஜேந்திரன் |
| தமிழ் மன்றம் | ,, என். எஸ். சிலம்பண்ணன்<br>தமிழ் பேராசிரியர் | ஜி நண்பன் |
| ஆங்கில மன்றம் | ,, தங்கவேலு<br>ஆங்கில துணைப் பேராசிரியர் | கே. சிவராஜ் |
| பொருளறிவியல் மன்றம் | ,, கே. நடேசன்<br>பொருளறிவியல் பேராசிரியர் | கே. இளங்கோ |
| உயிரியல் மன்றம் | ,, பி. குமாரசின்னையன்<br>உயிரியல் பேராசிரியர் | எ. அறிவழகன் |
| கணித மன்றம் | ,, எ. செங்கோட்டையா<br>கணித துணை பேராசிரியர் | பி. கார்த்திகேயன் |
| வரலாற்று மன்றம் | திருமதி. பி. ஜெயலட்சுமி<br>வரலாற்றுப் பேராசிரியை | வெங்கடேஸ்வரன் |
| சமூகப்பணி மன்றம் | திரு. பி. சந்திரசேகரன்<br>கல்வியியல் துணை பேராசிரியர் | ஜி. ஞானதுரை |

## மன்றங்களின் சிறப்பு நிகழ்ச்சிகள் :-

அனைத்து மன்றங்களின் தொடக்க விழா 27—9—84 பேராசிரியர் திரு. தி. கி. இராசகோபாலன் முதல்வர் அவர்கள் தலைமையில் பேராசிரியர் திரு. தி. இரா. லட்சுமி நாராயணன் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவுடன் நடைபெற்றது. நம் கல்லூரியின் சார்பில் 'உலக உணவு நாள்' 16—10—84 பேராசிரியர் திரு. இரா. பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் மாணவர்கள் பங்கேற்றனர். கொடி நாள் 7—12—84 அன்று முதல்வர் திரு தி. கி. இராசகோபாலன் அவர்கள் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. கல்லூரி மாணவர்கள் நண்பன், முருகேசன், தருமலிங்கம், ராஜேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு பேசினர். நம் கல்லூரியில் 'குடியரசு தினவிழா' சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. 'இளைஞர் ஆண்டு' முன்னிட்டு மாணவர் ராஜமாணிக்கம் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. 'ஐக்கிய நாடுகள் தினம்' திருமதி பி ஜெயலட்சுமி வரலாற்றுப் பேராசிரியை அவர்கள் தலைமையில், மாணவர்கள் சி முருகேசன், என். மனோகரன், நாராயணமூர்த்தி, சிவசுப்பிரமணியன், வெங்கடேசன், சக்திவேல், இளையாப்பிள்ளை, தேவராசன் ஆகியோர் பங்கு பெற்றனர். மாவட்ட அளவில் பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டிகளில் கார்த்திகேயன், நண்பன் ஆகிய மாணவர்கள் பங்கு பெற்று பரிசு பெற்றனர். கணிதப் பேரவைக் கூட்டம் 27—2—85 அன்று திரு. எ செங்கோட்டையா கணித உதவிப் பேராசிரியர் அவர்கள் தலைமையில் திரு ஜி. லட்சுமி நாராயணன் எம். ஏ., எம். எட், அவர்கள் கணிதம் பற்றி விரிவுரை ஆற்றினார். 8—3—85 அன்று அனைத்து மன்றக் கூட்டங்களும் அவ்வத் துறையைச் சார்ந்த மாணவர்களால் நடைபெற்றது.

## உடற் கல்வித் துறையும் பொது நலக் கல்வியும் :-

கல்லூரி விளையாட்டு மைதானம் மிகச் சிறியதாகவும் வசதி குறைவாக இருப்பினும் இங்கே எல்லாவித விளையாட்டுகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. மாணவர்களுக்கு கேரம், சதுரங்கம், மேசைப்பந்து, கைப்பந்து, வலைப்பந்து, பூப்பந்து கூடைப்பந்து போன்ற விளையாட்டுகளுக்கு வசதிகள் உள்ளன. எங்கள் கல்லூரி மாணவர்கள் மட்டுமின்றி அருகாமையில் உள்ள இளைஞர்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் விளையாடுவதற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக இவ்வாண்டு மாணவர்கள் மிக உற்சாகத்துடன் பங்கேற்று பயன் பெற்றனர் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## மாணவர் இல்லம் :-

இவ்வாண்டு மாணவர் இல்லம் ஜூலை மாதம் முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 50 பேர்கள் இல்லத்தில் சேர்க்கப் பெற்றனர். தற்போது 48 பேர்கள், தங்கி படித்து வருகின்றனர். இவ்வாண்டு உணவுக் கட்டணம் விலைவாசி ஏற்றத்தால் சிறிது கூடியுள்ள போதிலும் தினம் ரூ. 7—00 விருந்து ரூ 7-30க்கு மிகாமல் செயல்பட்டு வருகிறது. விடுதிக்கு ஆண்டுதோறும் தண்ணீர் வசதி கொடுத்து உதவும் எஸ். எஸ். எம். நிறுவனத்தார்க்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தாண்டு முதல் கல்லூரி வளாகத்திலேயே புதிய விடுதி தொடங்கும் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்

## கல்லூரி கலை மலர் :-

இவ்வாண்டு எல்லா ஆண்டுகளைப் போலவும் சிறந்த முறையில் வெளியிடப்படுகிறது. இம்மலர் மாணவர்கள் பேராசிரியர்கள் ஆகியோரின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இவ்வாண்டு மலருக்கு விளம்பரங்கள் தந்து ஊக்குவித்த பெருமக்களுக்கும் நல்ல முறையில் நூலை பதிப்பித்த பவானி ராஜா அச்சகத்தாருக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பழைய மாணவர் மன்றம் :-

இக்கல்லூரியில் முன்னாள் மாணவர் மன்றம் 1956ம் ஆண்டிலிருந்தே செயல்பட்டு வருகிறது. திரு. எம். கிருட்டிணசாமி பி.ஏ , பி.டி., அவர்கள் தலைவராகவும் திரு. கே. குழந்தைவேலு எம். ஏ., எம். எட்., அவர்கள் செயலராகவும் பணியாற்றி வருகின்றனர். பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பழைய மாணவர் மன்றம் பரிசுகளைக் கொடுத்து உதவியமைக்கு உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆசிரியர்கள் பணியிடைக் கல்வி :-

கல்லூரி கணிதப் பேராசிரியர் திரு எ. செங்கோட்டையா அவர்கள் மைசூரில் நடைபெற்ற என். சி. ஈ. ஆர். டி. கல்வியியல் ஆராய்ச்சி கருத்தரங்கில் பங்கு பெற்றார். திரு. பி. குமாரச் சின்னையன் உயிரியல் பேராசிரியர் சேலம் முதன்மைக் கல்வியதிகாரி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேல்நிலைப்பள்ளி பாடத் திட்ட மேம்பாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டார். சேலம் சாரதாக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் இக்கல்லூரி முதல்வர் திரு. தி. கி. இராசகோபாலன் அவர்களும் கல்வியியல் பேராசிரியர் திரு. இரா. பாலசுப்பிரமணியம் அவர்களும் பங்கு பெற்றனர்.

1985ம் ஆண்டு மார்ச் 24-ந் தேதி குமாரபாளையம் அபெக்ஸ் சங்கம், கோவை செஞ்சிலுவை சங்கமும் இணைந்து நடத்திய ரத்ததான முகாமிற்கு பி.எட்., மாணவர்கள் வி யுவராஜ், பி. திருஞானம், என். ராஜேந்திரன், சி. இளையாப் பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு இரத்ததானம் அளித்தனர் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## முடிவுரை :-

இக் கல்லூரி நல்ல முறையில் இயங்க அனைத்து உதவியும் நல்கிவரும் இயக்குநருக்கும் அலுவலகத்தாருக்கும் நன்றிக் கடப்பாடுடையேன். இந்த ஆண்டில் கல்லூரி நல்லமுறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பேராசிரியர்கள், அலுவலக அன்பர்கள். மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் உளங்கனிந்த பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். நம் கல்லூரி நலனில் ஆர்வம் கொண்டு வேண்டும்போது வேண்டிய உதவிகளைப் புரிந்துவரும் உள்ளூர் பெருமக்களுக்கும். எங்கள் அழைப்பினை ஏற்று வருகை புரிந்து விழாவினைச் சிறப்பித்த பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கௌ்கிறேன். இவ்விழாவிற்கு வருகைதந்து சிறப்புச் சொற்பொழிவுடன் பரிசுகளை வழங்க இசைவு தந்துள்ள சி. என். கல்லூரி முதல்வர் திரு. எம்.கே சுப்பிரமணியம் அவர்களுக்கும் என் ஆழ்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்து விடை பெறுகிறேன்.

நன்றி.

முதல்வர்

குமாரபாளையம்

6—4—85

★

*கல்லூரி கலை மலருக்கு எங்களது நல்வாழ்த்துக்கள்!*

# ராஜா அச்சகம்,

260, மெயின் ரோடு,

பவானி - 638 301.

# அரசு கல்வியியல் கல்லூரி, குமாரபாளையம்.

# சமூக நலப்பணி பாடி வாழ்க்கை 1984 - 85.

## அறிக்கை.

---

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய முதல்வர் அவர்களே, தலைமை ஏற்றுச் சிறப்பிக்க வந்திருக்கும் தொழிலதிபர் திருமிகு. ஜே. கே. கே. முனிராஜா அவர்களே, நம் கல்லூரி மாணவர்களின் பணியினை மதிப்பிட்டு வாழ்த்துரை வழங்க வந்திருக்கும் எனது ஆசிரியப் பெருந்தகை, நம் கல்லூரியின் முன்னாள் முதல்வர், பேராசிரியர் உயர்திரு டி. ஆர் லட்சுமி நாராயணன் அவர்களே, பாடியின் செயல் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் பாலசுப்ரமணியம் அவர்களே, பேராசிரியப் பெருமக்களே, கல்லூரி அலுவலர்களோடு வருகை தந்துள்ள விருந்தினர்களே, கட்டுப்பாட்டுடன் கண்ணியம் காத்து, கடமையை நிறைவேற்றி 'தம்பி உடையான் படைக்கஞ்சான்' என்ற பேரறிஞர் அண்ணாவின் கூற்றினை மெய்ப்பித்த எனது அருமைத் தம்பியரே, உங்கள் அனைவரையும் பேருவகையுடன் வரவேற்று 9—1—85 முதல் 11—1—85 வரையுள்ள மூன்று நாட்களும் இக்கல்லூரி வாளாகத்தினுள் நடந்த சமூக நலப்பணிப்பாடியின் அறிக்கையினை உவகையுடன் அளிப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

1. நோக்கம். 2. முறைகள்.

**நோக்கம் :**

1 சென்னைப் பல்கலைக் கழக விதிமுறைகளுக்கேற்ப 3 நாட்கள் பாடி வாழ்க்கையில் மாணவர்களை ஈடுபடுத்துதல்.

2 சமூகப் பணி, சாரணியம், முதல் உதவி, பொது சுகாதாரம், உடல் நலம் பேணல் போன்றவற்றுல், பயிற்சியளார்களின் கவனத்தை ஈர்த்தலும் ஈடுபாட்டை வளர்த்தலும்.

3 உடலமைப்பின் பெருமையை உணர்ந்து, கூட்டுழைப்பின் மூலம் உவகை பெற்று உடலையும் உள்ளத்தையும் வலிமையும் ஆற்றலும் செய்வதாக ஆக்கிக்கொள்ளுதல்.

4 பயிற்சியாளர்கள் மக்களாட்சி முறையில் பயிற்சி பெற உதவுதல்.

5 பிற இடங்களுக்குச் சென்று பயிற்சி மாணவர்கள் சமூகப் பணியில் ஈடுபடுவதற்கு முன்னோடியாக நம் கல்லூரி, புதிய உணவு விடுதி, ஆகியவற்றின் சுற்றுப்புறத்தை தூய்மையாக்கி பாதை அமைத்து அழகு படுத்த பயிற்சி அளித்தல்.

6 கல்வி, உற்பத்தி, ஆராய்ச்சி மூன்றும் ஒருசேர திகழ்வதே உண்மையான கல்வி என்ற கோட்பாட்டினை செயல் முறைப்படுத்துதல்.

முறைகள் :

1 மாணவர்களால் திட்டமிடப்பட்ட செயல் திட்டங்களை இணைப்பாளர் உதவியுடன் நிறைவேற்றுதல்.

2 கல்லூரி முன்புறமிருந்து கல்லூரியைச் சுற்றிலும் செல்லும் பாதைகளை ஒழுங்குபடுத்தல், விளையாட்டு அரங்கினை செம்மைப்படுத்துதல்,

3 குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், போன்ற பெயர்களைக் கொண்ட நான்கு இல்லங்களாக கல்லூரிச் சூழலையும் விடுதிச் சூழலையும் துப்புறவு செய்தல்.

4 கல்லூரியிலிருந்து விடுதிக்குச் செல்கின்ற பாதை அமைத்தல்.

5 தங்களுக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் கீழ் பணியாற்ற பயிற்சி பெறுதல்.

6 முட்செடிகளை அகற்றி கல்லூரி விடுதியின் அழகினை மிளிரச் செய்தல்.

தொடர்பு கொள்ளுதல் :-

1 இவ்வாண்டு இப்பாடி வாழ்க்கை துவக்கி வைக்க தொழில் அதிபர் திரு. P. இளங்கோ அவர்களை அழைப்பது.

2 சாரணியச் செயல் காக்க குமாரபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களின் ஒத்துழைப்புடன் அப்பள்ளி சாரண ஆசிரியர் மூவரையும் அழைப்பது.

3 எம் கல்லூரி மாணவர்களுக்கு உடல் நலம் பேணலும் பொதுச்சுகாதாரமும் என்ற தலைப்பில் சேலம் C.E.O. திரு. N. பெருமாள் பிள்ளை அவர்களையும் நல்ல ஆசிரியர் என்ற தலைப்பில் சிறப்பு சொற்பொழிவாற்ற திருமதி. P. பாரதி அம்மாள் (C. E. O. பெரியார் மாவட்டம்) அவர்களையும் அழைப்பது.

4 சேலத்தில் உள்ள இந்திய அரசின் விளம்பர இலாகாவினை தொடர்பு கொண்டு பயனுள்ள திரைப்படங்களைப் பெறுவது. இறுதி நாள் விழாவிற்கு குமாரபாளையம் J. K. K நிறுவனத்தின் இயக்குநர் திரு. J. K. K. முனிராஜா அவர்களையும் முன்னாள் முதல்வர் பேராசிரியர் T. R. இலக்குமி நாராயணன் அவர்களையும் அழைப்பது.

செயல்படுத்துதல் :-

எங்கள் கல்லூரி சமுக நலப்பணி பாடி வாழ்க்கை இக் கல்லூரி வளாகத்திலும் 9—1—85 முதல் 11—1—85 முடிய இயற்கைச் சூழல் இன்பமுடன் நிறைவேற இன்று நிறைவு விழாவினை உவகையுடன் கொண்டாடுகின்றோம்.

ஒவ்வொரு ஆண்டும் ஆசிரிய, மாணவர்களுக்கு கட்டாய பாடி வாழ்க்கை மூன்று நாட்கள் இருக்க வேண்டும் என்று பல்கலைக் கழகம் வலியுறுத்துகிறது. எனவே 1984-85 இல் இக்கல்லூரியில் சேர்க்கப்பட்ட 100 மாணவர்களுள் வேலை கிடைத்து படிப்பை விட்டுச்சென்ற மாணவர்களைத் தவிர எஞ்சிய 93 பேர்களும் 8—1—85 இரவும் 9—1—85 அதிகாலையும் கல்லூரிக்கு வந்து தங்கள் வருகையை பதிவு செய்யவும். மாணவர்களுக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் தங்கும் வசதி; குடிநீர் வசதி, உணவு வசதி, அனைத்தும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டன, மாணவர்கள் காலை 5-00 மணிக்கு துயிலெழுந்து ஆயத்தமாவர்

5-45க்கு தேனீர் வழங்கப்படும். 6-15 முதல் 7.00 வரை உடற்பயிற்சியில் ஈடுபட்டனர். பின்னர் 7-00 முதல் 7-45 வரை தங்கள் இருப்பிடங்களை துப்புறவு செய்தும் 7-45 முதல் 8 45 வரை காலைச் சிற்றுண்டி முடித்து 9-00 மணிக்கு தேசியக் கொடியேற்றி கொடி வணக்கம் செய்வதை வழக்கமாகக் கொண்டனர். முதல் நாள் 9—1—85 திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு சுலக்ஞான இளங்கோ அவர்கள் தலைமையில் எம் கல்லூரி முதல்வர் பேராசிரியர் T. K ராசகோபால் அவர்கள் சிறப்புரையாற்ற பாடி வாழ்க்கை துவங்கியது.

பாடி வாழ்க்கை தொடங்கி வைத்த பிறகு மாணவர்கள் கல்லூரி, விடுதி சுற்றுப்புற சூழலை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர் 9-00 மணிமுதல் 12-30 மணிவரை வேலை நடைபெற்றது. நகராட்சி தனி அலுவலர் அவர்களால் அனுப்பப்பட்ட கருவிகளும் நகரசுத்தி தொழிலாளர்கள் இருவரின் உதவியும் கிடைத்தது.

9—1—85 அன்று பிற்பகல் மதிய உணவு முடிந்தபிறகு 2-00 மணிமுதல் 4-00 மணி வரை பி. எட்., பயிற்சி மாணவர்களுக்கு பெரியார் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி. P. பாரதியம்மாள் அவர்கள் ''நல்லாசிரியர்'' என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார். அனைவருக்கும் பாடியின் சார்பில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10—1—85 அன்று எடுத்த பணி தொடர அன்று மாணவ வகுப்புகள் சாரண ஆசிரியர்களால் நடத்தப்பட்டது.


11—1—85 ஆகிய இன்று காலை எடுத்த பணி நிறைவு பெற இம்மாலை வேளையில் நிறைவு விழாவை நடத்துகின்றோம். இதற்கு சிறப்பு விருந்தினராக வந்துள்ள தொழில் அதிபர் திரு. முனிராஜா அவர்களையும் முன்னாள் முதல்வர் திரு. T. R. இலக்குமிநாராயணன் அவர்களையும் வரவேற்று இப்பாடியினர் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி நவிலல்: இம்மூன்று நாட்களிலும் மழை இடையூறு ஏதுமின்றி இப்பணியை சிறப்புற நடத்த உதவிய இறைவனை வணங்கி இத்திட்டத்தை உருவாக்கி எங்களை அதில் ஈடுபடுத்தி எங்களுக்கு சிறந்த அனுபவங்களை உருவாக்கிக் கொடுத்த எம் கல்லூரி முதல்வர் அவர்களுக்கு எமது நன்றியை உரித்தாக்குகிறேன். இத்திட்டத்தினை சிறப்பிக்க சாரணச் செயல்கள் பற்றி எங்களுக்கு விளக்கம் கொடுத்து விரிவுரை நிகழ்த்திய குமாரபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளி சாரண ஆசிரியர்கள் திரு. ராஜம் திரு. சந்தோஷம், திரு. கணேசன் ஆகிய சாரண ஆசிரியர்களும் துப்புறவு பணியாளர்களை அனுப்பி உதவிய குமாரபாளையம் நகராட்சி ஆணையர் அவர்களுக்கும் சிறப்புரையாற்றிய பெரியார் மாவட்ட C O திருமதி P. பாரதி அம்மா அவர்களுக்கும் எங்கள் நன்றியை உரித்தாக்குகிறேன். மற்றும் இப்பள்ளிக்கு முதுகெலும்பாய் இருந்து இயக்கிய பாடி செயல் இணைப்பாளர் பேராசிரியர் இரா. பாலசுப்ரமணியம் அவர்களுக்கும், ஏனைய பேராசிரியர்களுக்கும், அலுவலகப் பணியாளர்களுக்கும், பாடி இயக்குநரும் எங்கள் அன்புக்குரிய முதல்வருமான திருமிகு தி. க. ராசகோபால் அவர்களுக்கும் இப்படை தோற்கின் எப்படை வெல்லும் எனச் சூளுரைத்து என்னோடு தோள் கொடுத்துத் தொண்டாற்றிய திரு. எம்பெருமாள், திரு. சாமிநாதன், கண்காணிப்பாளர் திரு. லோகநாதன் ஆகியோருக்கும் பாசத்திற்குரியவர்களும், எனது அன்புத் தம்பிகளுமான மாணவர்கள் அனைவருக்கும் என் நன்றியினை பாடி முதன்மை அலுவலர் என்ற முறையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்

**பா. சந்திரசேகரன்,**
பாடி முதன்மை அலுவலர்.

—★—



பி. எட்., பயிற்சியாளர்கள் 1984 - 85

# "இருவரைப் பயந்த நங்கை"

C. RAVI,
Phy Sci. & Maths.

தமிழ்நாட்டில் இராமாயணக் கதை தொன்று தொட்டு பயின்றுளதென்பதை அகம், புறம் ஆகிய பாடல்களால் அறிகிறோம். தமிழ்க் காவிய உலகில் தனிச் சிறப்பினைப் பெற்றது இராமாயணம். இதனை இயற்றிய கம்பன் கோதாவரி நதியை 'சான்றோர்கவிஎனக் கிடந்த கோதாவரி" என்று புகழ்கிறார் அதற்குச் சான்றாக அவரே விளங்குகிறார்.

'சொல் மாண்புடை அன்னை சுமத்திரை' 'தூய நங்கை' என கம்பனால் புகழப்பட்ட இருவரைப் பயந்த நங்கை சுமத்திரையைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம். இராம காதையில் மிகச் சிறிய பங்கினை பெற்றிருந்த போதிலும் படிப்பவர்களின் மனத்திரையில் ஒளி வீசும் வரிகளாக திகழ்பவை ஒரு சில பாத்திரங்களே இவற்றில் சுமித்திரை என்ற பாத்திரமும் ஒன்றாகும். இக் காவியத்தில் முதன்முதலில் இவளை நாம் பாலகாண்டத்தில் 'திருவவதாரப் படலத்தில்' காண்கிறோம்.

மைந்தர்களைப் பெற தசரத மன்னன் வேள்வி இயற்றுகின்றான். இதிலிருந்து ஒரு பூதம் எழுந்து சதைப் பிண்டம் ஒன்றையளிக்கிறது. இதை தசரதன் கோசலைக்கும், கைகேயிக்கும், சுமித்திரைக்கும் அளிக்கிறான். இவ்வாறு தேவியர் மூவருக்கும் பகிர்ந்து கொடுத்த பிறகு உதிர்ந்தனவற்றை மீண்டும் சுமித்திரைக்கே கொடுக்கின்றான் இதனால் கோசலைக்கு இராமனும், கைகேயிக்கு பரதனும், சுமித்திரைக்கு இலக்குவனும், சத்ருக்கனும் பிறக்கின்றனர் இலக்குவனைச் சுமித்திரை ஈன்றமையை கம்பன்,

'இளையவற் பயந்தனள் இளைய மென் கொடி என்று கூறுகிறார். இவள் மறுபடியும் சத்ருக்கனை ஈன்றதை

'விடம் கிளர் விழியினுள் மீட்டும் ஈன்றனள்' என்கிறார். இராமன் சீதையை மணந்ததும் தன் தாயார் மூவரையும் வணங்குகிறான். சுமித்திரையின் திருவடிகளை இராமன் வணங்கிய செயலைக் கம்பன்,

'தூய சுமித்திரை தான் கொடிவோலும்' என்று கூறுகிறான் இராமன் கானகம் சென்றதும் கோசலையின் வருத்தத்னை சுமித்திரையினால் தான் தீர்க்க முடியும் என்று இராமன் எண்ணினான் இவ்வாறு கோசலைக்கும், சுமித்திரைக்கும் இடையேயுள்ள நெருக்கம் அன்பின் அடிப்படையில் எழுந்தது.

தந்தையின் கட்டளையை தலைமேல் தாங்கி கானகம் செல்லும் பொருட்டு சுமித்திரை யிடம் விடைபெற்றுச் செல்ல அரண்மனைக்குள் நுழைகிறான் இராமன். இதனை கம்பன்

'சொல் மாண்புடை அன்னை சுமித்திரை கோயில் புக்கான்' என்று கூறுகிறார். இவ்வாறு கானகம் செல்ல வந்த இராம இலக்குவனைக் கண்டதும் புண்பட்ட மனத்தினளாய் வருந்துகிறாள். இவ்வாறு வருந்திய இவளிடம் 'கார்வான் நெடுங்கான் இறை கண்டு

இவன் மீள்வென்'' என இராமன் கூறுகிறான். துயரக் கடலில் மூழ்கிய சுமித்திரையை தேற்றுவதற்காகவே அவன் இவ்வாறு கூறுகிறான். தன்னைப் பெற்ற கோசலையிடத்தும்கூட அவன் இவ்வாறு கூறவில்லை. இவள் இராமனிடத்தில் கொண்டிருந்த அளவு கடந்த அன்பினையே இது வெளிப்படுத்துகிறது. இராமனுடன் தானும் உடன் செல்வதாக இலக்குவனன் கூறி தூய நங்கை சுமித்திரையின் பொன் அடிகளை பணிந்தான்.

'அவன் (இராமன்) விதி அவனுக்கு உன் கதி பற்றி எண்ணி மதிவழி நில் என்று கூறாமல், ''இலககுவனனே! அந்தக் காடு உனக்கு வாழ ஒத்துக்கொள்ளாதது அன்று; ஆகவே அந்த வனத்தை நீ அயோத்தி போலவும், இராமனை உன் தந்தை போலவும், சீதையை எங்கள் மூவரைப் போலவும் (தாயாரைப் போல) பாவித்து இராமனோடு செல்வாய், இனி இவ்விடத்தில் நிற்றலும் குற்றமாகும்' என்றாள். இதனைக் கம்பர்.

''ஆகாதது அன்றால் உனக்(கு)
அவ்வனம் இவ்வயோத்தி
மாகாதல் இராமன் அம் மன்னவன்;
வையம் ஈந்தும்
போகா உயிர்த் தாயர் நம்
பூங்குழல் சீதை; என்றே
ஏகாய்! இனி இவ்வயின் நிற்றலும்
ஏதம்' என்றாள்''

(அயோ, காண்டம், நகர்நீங்கு படலம் 146) என்று கூறுகிறான்.

சுமித்திரை இலக்குவனிடத்தில் மேலும் கூறுகிறாள். ''மகனே! இராமன் பின்னர் நீ செல். ஆனால் அவனுடைய தம்பி என்ற முறையில் அல்லாமல் அவனுடைய அடிமையைப் போல கருதிக்கொள். அவன் இட்ட வேலைகளைச் செய். அவன் இந்நகருக்கு திரும்பி வருவானேயானால் நீயும் வா அஃதில்லையாயின் அவனுக்கு முன்பே நீ இறந்துவிடு'' என்று கூறுகிறாள் இவ்விடத்தில் இவளது தியாக மனப்பான்மை குன்றின்மேல் இட்ட விளக்கென தெரிகிறது. இதனால் இவள் பெற்ற மகனைக் காட்டிலும் இராமன் மீது கொண்டிருந்த அன்பு நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெரிகிறது. இதனைக் கம்பர்,

''பின்னும் பகர்வாள்; மகனே இவன்பின்செல், தம்பி
என்னும் படியன்(று) அடியாரின் ஏவல் செய்தி!
மண்ணும் நகர்க்கே இவன் வந்திடில் வா! அதன்மேல்
முன்னம்முடி'' என்றனள் வார்விழி சோர நின்றாள்''

(அயோ, காண்டம் நகர்நீங்கு படலம் 147) என்று கூறுகின்றான்.

இராமன் வனம் சென்றதைக் கேட்டு புத்திர சோகத்தினால் உயிர் துறக்கிறான் தசரதன். அவன் மாண்டதை அறிந்த சுமித்திரை மனம் வருந்தி, ஏக்கமுற்று மெய்துவண்டு உயிர் தளர்கிறாள். இதனைக் கம்பன்

''ஆழி வேந்தன் பெருந்தேவி அன்ன பண்ணி அமுது அரற்றி
தோழி அன்ன சுமித்திரையும் துலங்கி ஏங்கி உயிர் சோர''

என கூறுகிறான்.

இக் காவியத்தில் சுமித்திரை இலக்குவனுக்கு அறிவுரை கூறுவதாக கம்பன் படைத்த இரண்டு பாடல்களே சுமித்திரையின் பாத்திரப் படைப்பை பண்பின் சிகரத்திற்கு கொண்டு செல்கிறது. இவ்வாறு இராம காதை எனும் வானில் மின்னலென சில விநாடிகள் சுமித்திரை தோன்றினாலும் மனத்திரையினால் நீங்காத வடுவினை உண்டாக்கி விடுகிறான்.

★—★

இவண் மீள்வென்'' என இராமன் கூறுகிறான். துயரக் கடலில் மூழ்கிய சுமித்திரையை தேற்றுவதற்காகவே அவன் இவ்வாறு கூறுகிறான். தன்னைப் பெற்ற கோசலையிடத்தும்கூட அவன் இவ்வாறு கூறவில்லை. இவள் இராமனிடத்தில் கொண்டிருந்த அளவு கடந்த அன்பினையே இது வெளிப்படுத்துகிறது. இராமனுடன் தானும் உடன் செல்வதாக இலக்குவனன் கூறி தூய நங்கை சுமித்திரையின் பொன் அடிகளை பணிந்தான்.

'அவன் (இராமன்) விதி அவனுக்கு உன் கதி பற்றி எண்ணி மதிவழி நில் என்று கூறாமல், ''இலககுவனனே! அந்தக் காடு உனக்கு வாழ ஒத்துக்கொள்ளாதது அன்று; ஆகவே அந்த வனத்தை நீ அயோத்தி போலவும், இராமனை உன் தந்தை போலவும். சீதையை எங்கள் மூவரைப் போலவும் (தாயாரைப் போல) பாவித்து இராமனோடு செல்வாய். இனி இவ்விடத்தில் நிற்றலும் குற்றமாகும்' என்றாள். இதனைக் கம்பர்.

''ஆகாதது அன்றால் உனக்(கு)
அவ்வனம் இவ்வயோத்தி
மாகாதல் இராமன் அம் மன்னவன்;
வையம் ஈந்தும்
போகா உயிர்த் தாயர் நம்
பூங்குழல் சீதை; என்றே
ஏகாய்! இனி இவ்வயின் நிற்றலும்
ஏதம்' என்றாள்''

(அயோ, காண்டம், நகர்நீங்கு படலம் 146) என்று கூறுகிறான்.

சுமித்திரை இலக்குவனிடத்தில் மேலும் கூறுகிறாள். ''மகனே! இராமன் பின்னர் நீ செல். ஆனால் அவனுடைய தம்பி என்ற முறையில் அல்லாமல் அவனுடைய அடிமையைப் போல கருதிக்கொள். அவன் இட்ட வேலைகளைச் செய். அவன் இந்நகருக்கு திரும்பி வருவானேயானால் நீயும் வா அஃதில்லையாயின் அவனுக்கு முன்பே நீ இறந்துவிடு'' என்று கூறுகிறாள் இவ்விடத்தில் இவளது தியாக மனப்பான்மை குன்றின்மேல் இட்ட விளக்கென தெரிகிறது. இதனால் இவள் பெற்ற மகனைக் காட்டிலும் இராமன் மீது கொண்டிருந்த அன்பு நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனியெனத் தெரிகிறது. இதனைக் கம்பர்,

''பின்னும் பகர்வாள்; மகனே இவன்பின்செல், தம்பி
என்னும் படியன்(று) அடியாரின் ஏவல் செய்தி!
மண்ணும் நகர்க்கே இவன் வந்திடில் வா! அதன்மேல்
முன்னம்முடி'' என்றனள் வார்விழி சோர நின்றாள்''

(அயோ, காண்டம் நகர்நீங்கு படலம் 147) என்று கூறுகின்றான்.

இராமன் வனம் சென்றதைக் கேட்டு புத்திர சோகத்தினால் உயிர் துறக்கிறான் தசரதன். அவன் மாண்டதை அறிந்த சுமித்திரை மனம் வருந்தி, ஏக்கமுற்று மெய்துவண்டு உயிர் தளர்கிறாள். இதனைக் கம்பன்

''ஆழி வேந்தன் பெருந்தேவி அன்ன பண்ணி அமுது அாற்றி
தோழி அன்ன சுமித்திரையும் துலங்கி ஏங்கி உயிர் சோர''

என கூறுகிறான்.

இக் காவியத்தில் சுமித்திரை இலக்குவனுக்கு அறிவுரை கூறுவதாக கம்பன் படைத்த இரண்டு பாடல்களே சுமித்திரையின் பாத்திரப் படைப்பை பண்பின் சிகரத்திற்கு கொண்டு செல்கிறது. இவ்வாறு இராம காதை எனும் வானில் மின்னலென சில விநாடிகள் சுமித்திரை தோன்றினாலும் மனத்திரையினால் நீங்காத வடுவினை உண்டாக்கி விடுகிறாள்.

★—★

**கோ. நண்பன்,** எம். ஏ.,
தமிழ் மன்ற செயலர்,

# அண்ணாவின் அருந்தமிழ்.

கத்தும் கடல்சூழ்ந்த மல்லை! கொண்ட
காஞ்சித் திருநாட்டு முல்லை!
கொத்தும் சாதீயப் பாம்பை – கூர்ந்த
மதியாலே மாய்த்தார்; பழமைச்
சொத்தே வாழ்வென்று நம்பி—மனம்
சோர்ந்தே கிடக்காமல் செய்தார்.
பத்தெட்டுத் தொகை நூலின் வாழ்வை
மீட்டுத் தந்த தமிழ்ச் சோலை!



நாவலந் தண்பொழிலின் நாடு! அண்ணா
நாட்டம் கொண்டது சங்க ஏடு!
காவலந் தானில்லா வயற்காடாய்—மூடக்
கள்ளிகளே செழித்தது வனப்போடு!
சேவலைப் போல தமிழ்கூவி—தமிழனைத்
தினம் விழிக்க வைத்த புத்திநீவீர்
ஆவலைப் பொழிந்தூட்டி; அண்ணா,
அருந்தமிழால் இணைத்தார் ஒன்னா!

ஆத்திகத்தின் வேரறுக்க வந்தவீரர்—நாட்டில்
அடுக்கு மொழி காலூன்ற வைத்ததீரர்
சாத்திரத்தின் சகதியை அறிவுநீரால்—நீக்கி
சமநீதி நிலவிடவே நூல்யாத்தார்!
கோத்திரங்கள் கொலுவிருந்த வாழ்வை—மக்கள்
கொள்கையென அணைத்திருந்த தாழ்வை
மாத்திரத்தால் உடைத்தெறிந்த மேதை! அண்ணா
மாதமிழுக்கு சிறப்பூட்டும் மேடை!

இலக்கியத்தின் அங்கமே 'ஓரிரவு'—அது
இல்லையேல் காதல் பாதிரவு;
உலகுக்கு உணத்தியதே 'கம்பரசம்'—அண்ணா
உன்வாழ்வு தமிழிசம்; குட்டிக்
க(ா)தைகளில் சொல்வதே உலகநீதி—காதல்
மேம்படவே இன்னொன்று வேலைக்காரி?
பாதையின் பள்ளத்தைப் பார்க்க வைத்து
பழந்தமிழ் நாடென பெயரை வைத்தாய் !



திராவிடத்து மணியாக அணிசெய்து—நீர்
திக்கெட்டும் ஒளிசெய்தாய்; தமிழ்
வாழ்வுக்கு வழிவகுத்து : பணியை
வல்லோர்க்கும் இல்லோர்க்கும் சரிசெய்து,
தாழ்வென்ற சகதிகள் நீங்கிடவே
தமிழ்நாட்டிற்(கு) தன்வாழ்வை ஈந்து
பாழ்படா தமிழ் வளத்தைப் பகர்வதற்கு
பலகாலம் பாரில் பறந்தாய் !

பேதையர் வெம்மிய நிலையையோட்ட—தமிழ்
பகலவனாம் அய்யாவின் வழியைக் காட்டி
மேதைகள் பாதையில் தனியராக
மேம்பட்டு நின்றவரே அறிஞர் அண்ணா !
நாடகத்து வானிலே நடைபோட்டு—நற்
பெயராம் 'பெர்னாட்ஷா' பட்டமேற்று
வீடகத்து பொருள்மேல் நாட்டமின்றி—தமிழ் !
நாட்டகத்தை ஏற்றாரே நாட்டமோடு !

ஸ்ரீ - ரவி, வரிசை எண். 61.

# "சிந்தனைக்குச் சில"

1 மற்றவனுடைய தீய குணங்களை நாம் கற்களில் செதுக்குகிறோம். ஆனால் அவர்களின் நற்குணங்களை ஓடும் தண்ணீரில் எழுதுகிறோம்.
— விக்டர் ஹ்யூகோ

2 உலகத்தையே திருப்தி செய்வதாயிருந்தாலும் நான் கடவுளுக்கு துரோகம் செய்ய மாட்டேன். — மகாத்மா காந்தியடிகள்

3 திருடுவதைவிட பிச்சை எடுப்பது மேல். பிச்சை எடுப்பதைவிட உயிர் விடுவது மேல். — ஆஸ்கார் ஒயில்டு

4 மனிதனின் மூளைக்கு எதிரியாக நாக்கு பேசி விடுகிறது — ஷேக்ஸ்பியர்

5 மனிதன் விரும்பும் பொருட்களை அவனே கொலைசெய்கிறான்.
— ஆஸ்கார் ஒயில்டு

6 அனுபவம் சிறந்த பள்ளிக்கூடம். இதில் முட்டாள்கள் கற்றுக் கொள்வதில்லை. — பிராங்லின்

7 நான் உயிர் வாழ சாப்பிடுகிறேன்; மற்றவர்கள் சாப்பிடுவதற்காகவே உயிர் வாழ்கிறார்கள். — சாக்ரடீஸ்

8 கோழைகள் பலமுறை செத்துப் பிழைக்கிறார்கள் ஆனால் வீரன் ஒரே முறைதான் சாகிறான்.

9 பெண்களின் சக்தி மிகுந்த ஆயுதங்கள் கண்ணீர் துளிகள்.

10 கிரீடத்தை அணியும் தலை அவதியுறும். — ஷேக்ஸ்பியர்

11 சூடான நீரானாலும் தீயை அணைக்கும். — மோலியர்

12 ஓவியம் என்பது மௌனக் கவிதை கவிதை என்பது பேசும் ஓவியம்.
— எமர்சன்

13 வளமான காலத்தில் நண்பர்கள் நம்மைத் தெரிந்துகொள்கிறார்கள். வறுமைக் காலத்தில் நாம் நண்பர்களைத் தெரிந்துகொள்கிறோம்.
— சட்டன் காலின்ஸ்

14 வறுமை என்ற உருக்கு உலையில் நட்பு பரிசோதிக்கப்படுகிறது.

15 நல்லொழுக்கம் இல்லா அழகு மணமில்லா மலர்.
— பிரெஞ்சு பழமொழி

16 கடவுளுக்கு அஞ்சு. அடுத்தபடியாக கடவுளுக்கு அஞ்சாதவனைக் கண்டு அஞ்சு. — போலந்து பழமொழி

17 துணையில்லாமல் செல்லும் பெண்ணுக்கு எல்லோரும் துணையாகச் சுற்றுவர். — ஜெர்மனி பழமொழி

18. ஒருவன் தன் சகோதரனைத் தேடி கடல்வரை போவான்; காதலியைத் தேடி கடலுக்குள்ளேயும் போவான். — பல்கேரியா பழமொழி

# பெண்ணே உன்னைப் பற்றி...

1 சாதாரணமாக மிக நல்ல பெண் மிகச் சிறந்த மனிதனை விட மேலானவள். ... ஆங்கிலப் பழமொழி

2 அழகான பெண்ணுக்கு பணமும் பழமும் கொடு. புத்திசாலிப் பெண்ணுக்கு ஒரு புஷ்பம் கொடு. .... பிரேஸில் பழமொழி

3 கோடாரியின் ஒரே வெட்டில் மரத்தை சாய்க்க முடியாது. ஆனால் காதலியின் ஒரே பார்வையில் மனிதனை சாய்க்க முடியும். ... மெக்சிகோ பழமொழி.

4 தன்னுடைய பார்வையை விளம்பரப்படுத்த எண்ணும் பெண்ணும் தனது படிப்பை விளம்பரப்படுத்த எண்ணும் பண்டிதவனும் தூய்மையானவர்கள் அல்ல. ... சீனப் பழமொழி

5 பெண்ணின் வஞ்சனைகள் அனைத்தையும் அறிந்தவன் உயிரோடு சொர்க்கத்திற்குப் போகிறான். ... ஜெர்மன் பழமொழி

6 நரிக்கு வாலைப் போல பெண்ணுக்கு நாக்குத் தான் முக்கிய அவசியம் ... பிரான்ஸ் பழமொழி

7 ஒரு பெண்ணின் கற்புக்கு யாரால் எப்பொழுது இழுக்கு ஏற்படும் என்பதைச் சொல்ல முடியாது. பீங்கான் பொருளுக்கு எந்த நேரமும் சேதம் ஏற்படலாம். ... ஸ்வீடிஷ் பழமொழி

8 காரிகை, காற்று, காசு இவை மூன்றும் மாறிக்கொண்டே இருப்பவை. ... ஸ்பானிய பழமொழி

9 வெட்டுக்கிளியின் வாலைப் பற்றும் கைக்கு பழக்கம் வேண்டும். பெண்ணின் கையைப் பற்றும் கைக்கு யோசனை வேண்டும். ... ஸ்காட்லாந்து பழமொழி

**கி. ரிஷிகேசன்**, பி.எஸ்ஸி.,
வ. எண். 36.

# மண்ணுக்கே சுமையானேன்

**ப. இராமசாமி,**
வரிசை எண். 60.



*குயிலாய்ப் பிறந்திருந்தால்*
*காவெல்லாம் பாடிடுவேன்;*
*மயிலாய்ப் பிறந்திருந்தால்*
*மனம்களிக்க ஆடிடுவேன்;*
*கயலாய்ப் பிறந்திருந்தால்*
*குளங்களிலே குதித்திருப்பேன்;*
*உயிரில்லாப் பிண்டம்போல்*
*பூமிக்கே சுமையானேன்!*

*கல்லாய்ப் பிறந்திருந்தால்*
*கலைவளர்க்க உதவிடுவேன்;*
*நெல்லாய்ப் பிறந்திருந்தால்*
*நிலமுண்ண உதவிடுவேன்;*
*வில்லாய்ப் பிறந்திருந்தால்*
*வெற்றிகளைக் குவித்திடுவேன்;*
*முள்நிறைந்த புதர்க்காடாய்*
*மண்ணுக்கே சுமையர்னேன்!*

*ஏராய்ப் பிறந்திருந்தால்*
*கழனியெல்லாம் உழுதிடுவேன்;*
*தேராய்ப் பிறந்திருந்தால்*
*தெருவெல்லாம் சுற்றிடுவேன்;*
*நாராய்ப் பிறந்திருந்தால்*
*நறுமலரைத் தொடுத்திடுவேன்;*
*மருள் நிறைந்த மாந்தரிடை*
*மண்ணுக்கே சுமையானேன்!*

# பட்டங்களை சுமக்கும் பாமரர்கள்

**N. ராஜேந்திரன்** எம். எஸ்ஸி.,
ஆண்டு மலர் செயலர்.

இதென்ன
பாதங்கள்
நடக்கும்போது
பாதைகள்
திரும்பி வருகிறது.

இளையபாரதத்தின்
கரங்களில்
ஆருவதுவிரல்—ஆம்
புத்தகம் பிடிப்பதைவிட
புகைபிடிப்பதில்தான்
இப்போது
புலமை நடக்கிறது.

கல்லூரிக்குப் போன
மாணவன்
கணவனாக
வெளிவருகிறான்

காதல் பித்தனவன்
கண்ணகி காலத்தில்
கல்லூரிகள் இல்லையாம்,
இன்று—
கல்லூரிகள் காலத்தில்
கண்ணகி இல்லையே;
என்று கவிஞனாகிறான்

ஆமாம்—
மானுடக் கரையான்கள்
எழுப்பிய புற்றில்
மாணவர் இதயம்
மண் தீவுகளாகிவிட்டது

வாலிபச் சுவரில்
கல்வி ஆணிகள்
வரிசையாக அடிக்கப்பட்டன
கடைசியில்
மாட்டப்பட்டதோ
காகித சுத்தியல்கள்.

பட்டங்கள்
பதிவு செய்யப்பட்டும்
இங்கு—
வாழ்க்கை
அவிழ்ந்துதானே கிடக்கிறது.

வேலைத் தேடிப்போன
இளைஞர் கூட்டம்
வேட்டிகளை இழந்துவிட்டு
வெளியே வருகிறது.

வாழ்க்கையைத் தேடி
பாதங்களில்
நெருப்பு எழ நடந்தவர்கள்
கடைசியில்..
சமூகத்தின்
மரக்கால்களுக்கு
செருப்புகளாகி விடுகிறார்கள்.

இளைய வர்க்கமே!
கனவுகளுக்கு
வெள்ளையடித்து
கொண்டிருந்தது போதும்
எழுந்து விடு.

ஏனென்றால்—
நீ அமர்ந்திருப்பது
கட்டிலறை அல்ல
கழிவறை

வெளியே
காத்து நிற்கிறது
பட்டங்களை சுமந்த
பாமரக் கூட்டம்

# வேலை நிறுத்தம்

சமுதாயச் சந்தையிலே,
விலை போகும் பெருஞ்சுமைகள்
சாக்கடையின் பக்கத்தில்,
சாராய விற்பனைகள்,
சாலை யோரம் சரசமாடும்,
சல்லாப லீலைகள்
இவ்வளவே இந்நாட்டின்
பெருஞ்சுமைகள் என்று நினைத்தால்,
இன்னுமொன்று இங்கு உண்டு
வேலைநிறுத்தம் என்பது ஒன்று
குடித்து விட்டுக் கொட்டமடிக்கும்
கூட்டத்தினரும் வேலை நிறுத்தம்,
அனுதினமும் நாட்டிலே
ஏதோ ஒரு வேலை நிறுத்தம்
புற்றீசல் போல பல கோடி
கோரிக்கைகளோ பேரம் போகும்.
கட்டுப் பணத்தைக் கரிபூசி
அரசை ஏய்க்கும் முதலாளி
தான் உயர வழி வகுத்த
தொழிலாளியைப் பழி வாங்கிடவே
பிறக்கிறதே வேலை நிறுத்தம்,
அரசு ஊழியரும் கேட்பர்
ஊதிய உயர்வு, அரசும்
மறுத்தால் அவர்களின் ஆயுதம்
வேலை நிறுத்தமே!
கட்டிய கணவன் வேலை நிறுத்தம்
அணங்கு சென்ருள் அரசினர் மனைக்கு
வேலை நிறுத்த வன்முறையில்
கிடைத்த வெகுமதி இதுதானென்ருள்
தொட்டில் குழந்தை நோயில்
விழுந்திட தூக்கிச் சென்றனர்
மருத்துவ மனைக்கு! அந்தோ பரிதாபம்
கழுத்தைக் கட்டிய குழந்தை
காடு சேர்ந்ததே மருத்தக ஊழியர்
வேலை நிறுத்தத்தால்!

போக்கு வரத்து ஊழியர் வேலை நிறுத்தம்,
போகாதே பேருந்து எத்திக்கும்,
பலர் நிலையும் பார்க்கையிலே பரிதவிக்கும்
படித்து பட்டம் பெற்று
பாரினில் உழைத்து நாட்டின் பெருமையை
காப்பான் மகன் என பள்ளிக்கனுப்ப
இவன் படித்து பட்டம், பாடுவதோ
பன்மொழியில் வேலை நிறுத்தம் ஓங்குக
என்றே

இது போன்றே இந்நாட்டில்
இருக்கிறதே வேலை நிறுத்தம்
எந்தவொரு நிறுவனமும்
இருப்பதில்லை இஃதின்றி
நாட்டின் பொருள் நலிவடைய
நன்மக்கள் சலிப்படையச்
செய்வதுவே வேலை நிறுத்தம்
பல பொருள்களுமே பற்றாக் குறையே
பாதிப்பதுவோ அப்பாவி மக்கள்
இன்னும் பல வழிகளிலே
இன்னல் தரும் வேலை நிறுத்தம்
இல்லாத நிறுவனமும ஒன்றுண்டு
அதுதானே பள்ளியறை என்றவொன்று
தங்கச் செல்வம் சிறிதும் இன்றியும்
மக்கட் செல்வம் மட்டும் பெறுகிறோம் -பலகோடி
காளையவன் கை பிடித்தே
கட்டிலுக்குச் சென்றிடும் கன்னியவள்
செய்யவில்லை வேலை நிறுத்தம்
மென் கொடி இடையாள்
மெத்தையிலிருக்க
மெதுவே செல்லும் நாயகனவனும்
வெறுத்தே சென்றான் வேலை நிறுத்தத்தை,

சி. முருகேசன், எம். ஏ.,

# குமாரகம்பணன் — ஆய்வு

விசய நகர்ப் பேரரசு இஸ்லாமியர் ஆட்சி தென்னகத்தில் பரவ விடாமல் தடுக்கவும் இந்து சமயத்தையும் கோயில், கலை, பண்பாடுகளையும் பேணிப் பாதுகாக்கவும் தோன்றியது. முதலாம் அரிகரனுக்குப் பின்பு அவன் தம்பி முதலாம் புக்கன் அரசுரிமை எய்தினான். முதலாம் புக்கன் (கி. பி. 1355, 1377)

"பூமேவு தாரளகம் பூண்டகத் திருமடந்தை தாமேவு மாலை
மார்பில் சிறந்திலங்க
சென்றி திசை வென்றுவரச் செயமடந்தை தோள்மேவ
வென்றிபுனை
மேவலர்கள் அடிவணங்க மேகமலிவளகிரியும்
உலகுப்புகழ் வாரிக்கார் புக்கணன்" [1] என்று

கல்வெட்டுக்களில் பாராட்டப்படுகிறான். இவன் தமிழகத்தில் கி பி. 1350-இல் படையெடுத்-தான் என்று கோமல் செப்பேடு [2] குறிப்பிடுகின்றது.

இந்த புக்கராயனுக்கும் தேபாயி என்ற அரசிக்கும் பிறந்தவன் குமாரகம்பணன். இவன் தொடக்கத்தில் ஹொய்சள மன்னரின் வாயிற்காவலன் பணி புரிந்தான் என்பதை, 'மைசூரான் வாசல் தளகர்த்தம் கம்பண உடையார்' என்று மதுரைத் தலவரலாறு குறிப்பிடுகின்றது. [3]

பின்பு இவன் முல்பாகல் இராச்சியத்தின் மகா மண்டலீசுவரனாக நியமிக்கப்பட்டான் அப்பொழுது புக்கராயனால், பெரும்படையுடன் சென்று சம்புவராருடைய இராஜ கம்பீர இராச்சியத்தையும் மதுரைச் சுல்தானின் நாட்டையும் வென்று விசயநகரோடு சேர்க்குமாறு ஆணையிடப்பட்டான். [4]

எனவே கி. பி. 1363-ஆம் ஆண்டில் குமாரகம்பணன் முல்பாகல் இராச்சியத்திலிருந்து பெரும்படையுடன் புறப்பட்டான். அப்பொழுது தானைத் தலைவர்கள் கண்டார குளிமாரப்ப நாயக்கன் சாளுவமங்கு என்பவர்கள் தலைமை தாங்கிச் சென்றனர். தமிழ்நாட்டை நோக்கிப் படை விரைந்து சென்றது. பாலாற்றைக் கடந்து படைவீடு என்ற உட்பிரிவு நாட்டில் அமைந்-திருந்த விரிஞ்சிபுரம் என்னும் இடத்தைக் கைப்பற்றி இராஜநாராயணச் சம்புவராயனின் கோட்டையை முற்றுகையிட்டது. சம்புவராயன் தோல்வியுற்று கப்பங்கட்ட ஒப்புக்கொண்டான்.

இவ் வெற்றியினைக் கல்வெட்டு வாசகம்,

"மண்டலிகர் அடிபரவயாப்புலவர் விளம்பாட
கண்டவர்கள் மனமகிழ காசினியும் கலி தீரச்
சம்பன் அரண் பலவழித்துச் சம்பனையுங் கைக் கொண்டு
வெம்பரிய மேற்கொண்டு வெரும் உலகு தும்பறுத்து
தனக்கு நிகர் தானை சோமய்ய தன்னாய்க்கன்
மனங்களிக்க மண்புரந்த மாரப்பன்" [5] என்று

குறிப்பிடுகிறது". தானைத் தலைவன் கண்டாரகுளி மாரப்பன் இவ்வாறு பாராட்டப்படுகிறான். அப்பொழுது குமாரகம்பணன் இவ்வெற்றியைக் கொண்டாடினான் என்பதைக் கல்வெட்டு, 'காலமுகில் போல் வழுங்கு கம்பணனும் கொண்டாட, [6] என்று குறிப்பிடுகிறது. தானைத் தலைவன் மாரப்பன் மூவராய கண்டன் என்ற பட்டமும் அண்ணமங்கலப்பற்று என்ற ஊரைப் பரிசாகவும் பெற்று' பெருமையடைந்தான். பின்பு அவன் அவ்வூர்க் குழந்தையாண்டார் கோயில் இரண்டாம் பிரகாரம் முன்பு கி. பி. 1363இல் கோபுரம் எடுத்தான். [7]

குமாரகம்பணன் சிறிது காலம் காஞ்சியில் தங்கியிருந்தான். மேலும் படையெடுத்துச் சென்று கொங்கு மண்டலம் முழுவதையும் போரிட்டு வென்று அடிப்படுத்தான். கொங்கு மண்டல வெற்றி கி. பி. 1366-இல் ஆகும். இக் கொங்கு வெற்றியைக் கோவை மோடஹல்லி, சடையம்பாளையம் கல்வெட்டுகள் தெளிவு படுத்துகின்றன.

பின்பு கம்பணன் படையுடன் சோழன் அகளங்கன் படை போரிட்டது. அப்பொழுது சோழன் படைத் தலைவன் இராசிபுரம்திந்தன் என்பவன் முன்னேறிச் சென்று வெற்றி கொண்டதாகக் கொங்குமண்டல சதகம்,

